தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

**வேளாண்மை அறிவியல் நிலையம்**

நீடாமங்கலம் - 614 404

ICAR


# நெற்களஞ்சியம்


மலர் : 8 & 9 ஏப்ரல் - ஜுன் 2012 & ஜுலை - செப்டம்பர் 2012 இதழ் : 18




## புதிய துணை வேந்தர் பதவியேற்பு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பத்தாவது துணை வேந்தராக **முனைவர் கு. இராமசாமி** அவர்கள் 27.08.2012 அன்று பொறுப்பேற்றுள்ளார்கள். துணை வேந்தர் அவர்கள் நமது பல்கலைக்கழகத்தில் 36 ஆண்டுகளுக்கும் மேலாக பல்வேறு நிலைகளில் பணியாற்றிய அனுபவம் பெற்றவர். திறமைமிக்க சிறந்த விஞ்ஞானியான நமது மாண்புமிகு துணை வேந்தர் அவர்கள் சிறந்த வேளாண் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப்பணிகள் மூலம் நாட்டின் வேளாண் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் தமது தொலைநோக்கு பார்வையோடு செயல்பட நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில் வாழ்த்துகிறோம்.

## எட்டாவது மண்டலத்தின் திட்ட இயக்குநர் வருகை

இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழக எட்டாவது மண்டலத்தின் திட்ட இயக்குநர் முனைவர் எஸ்.பிரபுகுமார் அவர்கள் இந் நிலையத்திற்கு 05.04.2012 அன்று வருகை புரிந்து இங்கு அமைக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப மாதிரித் திடல்களை பார்வையிட்டதோடு நிலையத்தில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளை இணைய தளத்தில் உடனுக்குடன் வெளியிட்டு வருவதை வெகுவாக பாராட்டினார்.



## ஆசிரியர் குரல்



பருவ மழை பொய்த்துப் போனதின் விளைவாக மேட்டூர் அணையில் நீர் இருப்பு திருப்திகரமாக இல்லாததால் திருவாரூர் மாவட்டம் பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொண்டு வருகிறது. இதனால் குறுவை சாகுபடிக்கு வழக்கமாக ஜுன் மாதம் திறக்கப்படாத காரணத்தினால் ஒரிரு குழாய் கிணறு பாசன வசதி உள்ளவர்களைத் தவிர மற்றவர்களால் நெல் பயிரிட முடியாத சூழ்நிலை. சம்பா சாகுபடிக்கும் அணை திறக்க முடியாத சூழ்நிலையில் இருக்கின்ற நீர் இருப்பை செப்டம்பர் மூன்றாம் வாரத்தில் திறந்து விடுவதன் மூலம் பின்சம்பா மற்றும் தாளடி நெல் சாகுபடி மேற்கொள்ள வாய்ப்பு ஏற்படும் வகையில் அரசு அறிவித்த சமுதாய நாற்றங்கால் மற்றும் புழுதி விதைத்த இறவை நெல் சாகுபடி போன்றவற்றிற்கான தொழில் நுட்பங்கள் வழங்குவதற்கு அறிவியல் நிலையம் சீரிய முயற்சிகளை மேற்கொண்டது. அது மட்டுமல்லாமல் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நடைப்பெற்ற விழிப்புணர்வு முகாம் மற்றும் பயிற்சிகளில் விஞ்ஞானிகள் தொழில்நுட்ப விளக்கமளித்து வருகிறார்கள். விவசாயிகளின் நாடித்துடிப்பை நன்கறிந்து அவர்களது வாழ்க்கைத்தரம் மேம்பட இந்நிலையம் வேளாண் சார்ந்த உப தொழில்களான பரண்மேல் ஆடு வளர்ப்பு, புறக்கடை கோழி வளர்ப்பு, உள்நாட்டு கூட்டு கெண்டை மீன் வளர்ப்பு, ஸ்பைரூலினா வளர்ப்பு, பட்டுப் புழு வளர்ப்பு மற்றும் காளான் வளர்ப்பு பற்றிய விழிப்புணர்வை விவசாயிகளிடையே பிரபலப்படுத்தி வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் பகிர்ந்துக் கொள்கிறோம். - ஆசிரியர்.

## தமிழக அரசின் உழவர் பெருவிழா

தமிழக அரசின் அறிவுறுத்தலின்படி வேளாண்மையில் இரண்டாம் புரட்சியை ஏற்படுத்தி உணவு உற்பத்தியை இரண்டு மடங்காகவும் தனி நபர் விவசாயியின் வருமானத்தை மூன்று மடங்காகவும் உயர்த்திட தமிழக அரசின் மாவட்ட அளவிலான உழவர் பெருவிழா நன்னிலம் அருகில் உள்ள மாப்பிள்ளைக்குப்பத்தில் 14.04.2012 அன்று வெகு சிறப்பாக நடைப்பெற்றது. இவ்விழாவில் நமது அறிவியல் நிலையம், சகோதரத் துறையினர் மற்றும் தனியார் துறையினர் கருத்துக் காட்சி அரங்குகளை அமைத்திருந்தனர். தமிழக அரசின் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் இரா.காமராஜ் அவர்கள் நமது கருத்துக் காட்சி அரங்கினை பார்வையிட்டு பாராட்டினார்.



புள்ளவராயன் குடிகாடு கிராமத்தில் நடைபெற்ற உழவர் பெருவிழா நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் சி. நடராசன் அவர்கள் தலைமையில் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் தி. செங்குட்டுவன் அவர்கள் தொழில்நுட்ப விளக்கமளித்தார்.

ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் நடைப்பெற்ற தமிழக அரசின் உழவர் பெருவிழாவில் நிலைய விஞ்ஞானிகள் அவரவருக்கு ஒதுக்கப்பட்ட வட்டாரங்களில் கலந்து கொண்டு தொழில் நுட்ப விளக்கமளித்தனர்.







# முக்கிய நிகழ்வுகள்

## மாவட்ட அளவிலான விழிப்புணர்வு முகாம் / கருத்தரங்கம்

### பரண்மேல் ஆடு வளர்ப்பு

இந்நிலையத்தில் 13.07.2012 அன்று திருவாரூர் மாவட்ட ஆட்சியர் சி. நடராசன் அவர்கள் தலைமையில் பரண் மேல் ஆடு வளர்ப்பு குறித்த மாவட்ட அளவிலான விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. பயிற்சியில் பரண் அமைத்தல், கலப்பின ஆடுகளின் வகைகள், பராமரிப்பு முறைகள், தீவன மேலாண்மை மற்றும் பூச்சி நோய் மேலாண்மை குறித்து முனைவர் கு. சுதாகர் மற்றும் நீடாமங்கலம் கால்நடை மருத்துவர் க.மகேந்திரன் ஆகியோர் தொழில்நுட்ப விளக்கமளித்தனர். இம்முகாமில் டெல்டா மாவட்டங்களை சேர்ந்த 200 க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். விவசாயிகள் வெள்ளங்குழி மற்றும் ஆதனூர் ஆகிய கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள மாதிரி பண்ணைக்கு கண்டுணர்வு சுற்றுலா அழைத்து செல்லப்பட்டனர்.





முதலில் நடைபெற்ற விழிப்புணர்வு முகாமில் ஏராளமானோர் திரண்டதால் மற்றவர்கள் பயன்பெறும் வகையில் மீண்டும் பரண்மேல் ஆடு வளர்ப்பு பற்றிய கருத்தரங்கம் 07.08.2012 அன்று நடைபெற்றது. நிகழ்சிக்கு விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் பா.கலைச்செல்வன் அவர்கள் தலைமை வகித்தார். பயிற்சியில் 150 விவசாயிகள் கலந்து கொண்டனர். கருத்துக் காட்சியில் ஏழுக்கும் மேற்பட்ட கலப்பின ஆடுகள் விவசாயிகளின் பார்வைக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

### புறக்கடை கோழி வளர்ப்பு

கிராமப்புற மக்களின் பொருளாதாரம் மேம்பட இந்நிலையத்தில் 29.08.2012 அன்று புறக்கடை கோழி வளர்ப்பு விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. திருவாரூர் மாவட்ட ஆட்சியர் திரு. சி. நடராசன் அவர்கள் முகாமை துவக்கி வைத்து தலைமையுரை ஆற்றினார். திருவாரூர் மாவட்டத்தை சேர்ந்த 132 முன்னோடி விவசாயிகள்,




கிராமப்புற இளைஞர்கள் மற்றும் பெண்கள் கலந்து கொண்டனர். முனைவர் மெ. செந்தில் குமார், திருவாரூர் மாவட்ட உழவர் பயிற்சி மையத்தின் இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எம். கதிர்செல்வன், கால்நடை மருத்துவர் திரு. க.மகேந்திரன் மற்றும் கால்நடை மருத்துவர் திரு. ஜெ.ஜெயபாலன் ஆகியோர் தொழில்நுட்ப விளக்கமளித்தனர். முகாமில் கலந்து கொண்டவர்கள் இந்நிலையத்தில் அமைக்கப் பட்டுள்ள புறக்கடை கோழி வளர்ப்பு தொழில் நுட்ப மாதிரி திடல்களை பார்வையிட்டனர்.

### பட்டு வளர்ப்புத் தொழில்

கிராமப்புற மக்கள் நிரந்தர மற்றும் நிறைவான வருமானம் பெற இந்நிலையத்தில் 26.09.2012 அன்று பட்டு வளர்ப்புத் தொழில் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இம்முகாமை இந்நிலையத்துடன் சேலம் மண்டல பட்டு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் மற்றும் பட்டு வளர்ச்சி துறை ஆகியவை இணைந்து நடத்தியது. திருவாரூர் மாவட்ட ஆட்சியர் திரு. சி. நடராசன் அவர்கள் இவ்விழிப்புணர்வு முகாமை துவக்கி வைத்தார். திருவாரூர் மாவட்டத்தை சேர்ந்த 85 முன்னோடி விவசாயிகள் மற்றும் பண்ணை மகளிர் கலந்து கொண்டனர்.



இவ்விழிப்புணர்வு முகாமில் வேளாண்மை அறிவியல் நிலைய பூச்சியியல் துறை உதவி பேராசிரியர் முனைவர் மெ. செந்தில்குமார் மற்றும் சேலம், மண்டல பட்டு வளர்ப்பு ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி திரு. செ.இராஜகுமார், இதர பட்டு ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மைய விஞ்ஞானிகள் திரு.த. திருநாவுக்கரசு, திரு. தா.கோ.செல்வராஜு ஆகியோர் பட்டு வளர்ப்பு தொழில் நுட்பங்களை எடுத்துரைத்தனர்.

### சீர்மிகு தொழில்நுட்பங்கள்

இந்நிலையத்தில் 16.04.2012 மற்றும் 17.04.2012 ஆகிய தேதிகளில் இரண்டாம் பசுமை புரட்சிக்கு சீர்மிகு தொழில்நுட்பங்கள் என்ற தலைப்பில் மாவட்ட அளவிலான வேளாண் கருத்தரங்கு நடைபெற்றது.

திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் தி. செங்குட்டுவன் அவர்கள் ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்து விளக்கமளித்தார். நிலைய விஞ்ஞானிகள் தங்க. தாமோதரன், சுதாகர், காமராஜ், குமணன், செந்தில்குமார் ஆகியோர் திருந்திய நெல் சாகுபடி, பரண் மேல் ஆடு வளர்ப்பு, நெல் சாகுபடியில் நவீன இயந்திரங்கள், துல்லிய பண்ணையம், புறக்கடை கோழி வளர்ப்பு மற்றும் மீன் வளர்ப்பு குறித்து தொழில்நுட்ப விளக்கமளித்தனர்.



முதல் நாள் நடைபெற்ற கருத்தரங்களில் திருவாரூர், நன்னிலம், குடவாசல், கொரடாச்சேரி மற்றும் வலங்கைமான் வட்டாரங்களை சேர்ந்த 65 விவசாயிகள் கலந்து கொண்டனர். இரண்டாம் நாள் நடைபெற்ற கருத்தரங்கில் நீடாமங்கலம், மன்னார்குடி, கோட்டூர், திருத்துறைப்பூண்டி மற்றும் முத்துப்பேட்டை வட்டாரங்களை சேர்ந்த 56 விவசாயிகள் கலந்து கொண்டனர். கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களுக்கு தொழில்நுட்ப விளக்கமும், கையேடும் வழங்கப்பட்டன.

## தீவனப் பயிர்கள் சாகுபடி தொழில்நுட்பங்கள்

கால்நடைகளின் பால் உற்பத்தித் திறன் மற்றும் ஆரோக்கியத்தை பேணிப் பாதுகாக்க திருவாரூர் மாவட்ட விவசாயிகளுக்கு, பசுந்தீவனங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 20.06.2012 அன்று பசுந் தீவனப் பயிர்களின் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து முனைவர் ச. ஆனந்த கிருஷ்ணவேணி பயிற்சியளித்தார். பயிற்சியில் பசுந்தீவனப் பயிர்கள் மற்றும் விதைகள் பற்றிய கருத்துக்காட்சி அமைக்கப்பட்டிருந்தது. பயிற்சியில் 35 பயனாளிகள் கலந்து கொண்டனர்.



## மதிப்பூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் தயாரித்தல்

இந்நிலையத்தில் 19-6-2012 அன்று அரிசித் தவிடு மற்றும் அரிசி (பொக்கு) ஆகியவற்றை மதிப்பூட்டுதல் மூலம் பிஸ்கட் மற்றும் இனிப்புகள் தயாரிப்பது குறித்து தஞ்சாவூர் இந்திய பயிர் பதனீட்டு மைய விஞ்ஞானி மற்றும் இந்நிலைய திட்ட உதவியாளர் திருமதி ரேகா ஆகியோர் செய்முறை விளக்கங்களுடன் பயிற்சி அளித்தனர். பயிற்சியில் 30 க்கும் மேற்பட்ட மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



## காளான் வளர்ப்பு மற்றும் மதிப்பூட்டுதல்

கிராமப்புற இளைஞர்கள், விவசாயிகள் மற்றும் பண்ணை மகளிர் பயன்பெறும் வகையில் காளான் வளர்ப்பு மற்றும் மதிப்பூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் தயாரிப்பு பற்றிய பயிற்சி 19.07.2012 அன்று முனைவர் ச. ஆனந்த கிருஷ்ணவேணி மற்றும் திட்ட உதவியாளர் திருமதி ரேகா ஆகியோர்களால் நடத்தப்பட்டது. பயிற்சியின் போது வணிக ரீதியில் காளான் வளர்ப்பு தொழில் நுட்பங்கள் குறித்த செயல் விளக்கமும், மதிப்பூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் தயாரித்தல் பற்றிய செய்முறை விளக்கமும் செய்து காண்பிக்கப்பட்டது.



## சுவர்ணா சப் -1 நெல்

வெள்ளத்தை தாங்கி வளரும் நெல் இரகமான சுவர்ணா சப் 1 பற்றிய தொழில்நுட்பங்கள் குறித்து 23.08.2012 அன்று திருத்துறைப்பூண்டி மற்றும் முத்துப்பேட்டை வட்டார விவசாயிகளுக்கு முனைவர் ச. ஆனந்த கிருஷ்ணவேணி அவர்கள் பயிற்சியளித்தார். பயிற்சியில் இரகத்தின் சிறப்பியல்புகள், சாகுபடி தொழில் நுட்பங்கள் பற்றி விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டது. பயிற்சியின் இறுதியில் 22 விவசாயிகளுக்கு தலா 12 கிலோ வீதம் சுவர்ணா சப் -1 நெல் விதை முதல்நிலை செயல் விளக்கத் திடல் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது.



## கணினி மூலம் தொழில்நுட்ப தகவல் பரிமாற்றம்

இந்நிலையத்தின் ஐந்தாவது அறிவியல் ஆலோசனைக் குழுக் கூட்டத்தின் பரிந்துரைகளில் ஒன்றான விரிவாக்க பணிகளில் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களை கடைப்பிடிக்க முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்பதை கவனத்தில் கொண்டு 24.07.2012 அன்று இந் நிலையத்தில் கணினி மூலம் தொழில்நுட்ப தகவல் பரிமாற்றம் என்ற தலைப்பில் பயிற்சி அளிக்கப்பட்டது. முனைவர் தங்க. தாமோதரன், திருமதி சகுந்தலா மற்றும் முனைவர் மதுமிதா ஆகியோர் பயிற்சி அளித்தனர்.



## நவீன பயிர் உற்பத்தி தொழில்நுட்பங்கள்

திருவாரூர் மாவட்ட உதவி வேளாண்மை அலுவலர்களுக்கு 10.07.2012 அன்று நவீன பயிர் உற்பத்தி தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. புதிய ரகங்கள், பயிர் மேலாண்மை உத்திகள், பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்து விஞ்ஞானிகள் தொழில் நுட்ப விளக்கமளித்தனர். மொத்தம் 46 உதவி வேளாண்மை அலுவலர்கள் கலந்து கொண்டு பயிற்சிப் பெற்றனர்.



## ஸ்பைரூலினா வளர்ப்பு



உலக சுகாதார மையமும், ஐக்கிய நாடுகளின் அமைப்பும் ஸ்பைரூலினா என்ற சுருள் பாசியை பாதுகாப்பான உணவாக பரிந்துரைத்துள்ளதால் திருவாரூர் மாவட்டத்தில் ஸ்பைரூலினா வளர்ப்பு குறித்து விழிப்புணர்வை விவசாயிகளிடையே ஏற்படுத்தும் நோக்கில் 11.09.2012 அன்று இந்நிலையத்தில் ஸ்பைரூலினா வளர்ப்பு பற்றிய பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் டெல்டா மாவட்டங்களை சார்ந்த 40க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழக பேராசிரியர் முனைவர் மணிகண்டவேலு மற்றும் தனியார் நிறுவனத்தை சேர்ந்த தினேஷ்குமார் ஆகியோர் ஸ்பைரூலினா வளர்ப்பு, மதிப்புக் கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல் பற்றி பயிற்சி அளித்தனர்.

## மல்பெரி செடியில் பயிர் பாதுகாப்பு



குடவாசல் கிராமத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சி. நடராசன் அவர்கள் தலைமையில் பட்டு புழு வளர்ப்பு குறித்து மாவட்ட அளவிலான விழிப்புணர்வு முகாம் நடைபெற்ற போது (17.04.2012) மல்பெரி செடியில் பப்பாளி மாவுப் பூச்சி தாக்குதலை வயலிலேயே இனம் காணல், வாழ்க்கை முறை, அசிரோபேகஸ் பப்பாயே என்ற ஒட்டுண்ணியின் செயல்பாடு மற்றும் செலுத்தும் விதம் பற்றி முனைவர் மெ. செந்தில்குமார் பயிற்சி அளித்தார்.

## பருத்தியில் மாவுப்பூச்சி மேலாண்மை



திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், சிமிழி கிராமத்தில் நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில் பருத்தியில் ஒருங்கிணைந்த மாவுப்பூச்சி மேலாண்மை குறித்து 07.06.2012 அன்று பயிற்சி நடைபெற்றது. பயிற்சியில் மாவுப் பூச்சியின் தாக்குதல் அறிகுறி, வாழ்க்கை வரலாறு, மாவுப்பூச்சியின் இயற்கை எதிரிகள், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு போன்ற பல்வேறு தொழில்நுட்பங்கள் குறித்து முனைவர் மெ. செந்தில்குமார் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார்.

## பருத்தி சாகுபடியில் இயந்திரமயமாக்கல்



குடவாசல் வட்டாரம் சிமிழி கிராமத்தில் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் தி.செங்குட்டுவன் அவர்கள் தலைமையில் பருத்தி சாகுபடியில் இயந்திரமயமாக்கல் குறித்து 13-6-2012 அன்று நடைபெற்ற பயிற்சியில் சுற்று வட்டார கிராமங்களை சேர்ந்த 60 க்கும் மேற்பட்ட முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர். முனைவர் காமராஜ் மற்றும் முனைவர் மெ. செந்தில்குமார் ஆகியோர் தொழில்நுட்ப விளக்கமளித்தனர்.

## கறவை மாடுகளுக்கான தாது உப்புக் கலவை



நீடாமங்கலம் வட்டம் பெரம்பூர் கிராமத்தில் கறவை மாடுகளுக்கான குறிப்பிட்ட பகுதிக்கேற்ற தாது உப்புக் கலவை பற்றிய களப் பயிற்சி 21.09.2012 அன்று முனைவர் ச. ஆனந்த கிருஷ்ணவேணி அவர்களால் நடத்தப்பட்டது. பயிற்சியில் தாது உப்புக் கலவையை அளிக்கும் முறை பற்றி செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு நபருக்கு 15 கிலோ வீதம் தாது உப்புக் கலவையை திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் தி.செங்குட்டுவன் அவர்கள் முதல் நிலை செயல் விளக்கத் திடல் திட்டத்தின் கீழ் வழங்கினார்.

## சம்பங்கி மலர் சாகுபடி

இந்நிலையத்தின் மூலம் இந்த ஆண்டு படுகை நிலங்களில் சம்பங்கி மலர் சாகுபடி குறித்து கள ஆய்வு திடல் செயல்படுத்தப் பட்டுள்ளது. வலங்கைமான் வட்டாரம் நல்லூர் கிராமத்தில் முனைவர் கை.குமணன் மற்றும் முனைவர் கு. சுதாகர் ஆகியோர் சம்பங்கி மலர் சாகுபடிக்கான வாய்ப்புகள், வணிக முக்கியத்துவம், சாகுபடி முறைகள் மற்றும் ஏற்றுமதிக்கான வாய்ப்புகள் குறித்து தொழில்நுட்ப பயிற்சி அளித்தனர்.

**உழவரின்**
**வளரும் வேளாண்மைக்கு**
**சந்தா செலுத்துவீர்...**

ஆயுள் சந்தா (15 ஆண்டுகள்) ரூ.1,000/-

ஆண்டு சந்தா ரூ.100/-

தனி இதழ் ரூ.15/-

## கோகோ பயிரில் கவாத்து செய்தல்



மன்னார்குடி வட்டம் சுந்தரக்கோட்டை கிராமம் திரு.ஜோதிகுமார் அவர்களின் கோகோ தோட்டத்தில் 23.05.2012 அன்று நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் சார்பில் கோகோ பயிரில் கவாத்து செய்வது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த பயிற்சியின் போது தோட்டக்கலை உதவிப் பேராசிரியர் முனைவர் கை. குமணன் கோகோவில் கவாத்து செய்வதின் முக்கியத்துவத்தை பற்றி விளக்கி கூறி செயல் விளக்கமும் செய்து காண்பித்தார். இந்நிகழ்ச்சியில் 20க்கும் மேற்பட்ட கோகோ விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர் .

## ஒருங்கிணைந்த பண்ணையம்

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் திரு. சி. நடராசன் அவர்களின் அறிவுறுத்தலின்படி நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் தி. செங்குட்டுவன் அவர்களின் தலைமையில் மன்னார்குடி வட்டம் திருராமேஸ்வரம் கிராமத்தில் காவேரி மற்றும் மஞ்சனவாடி மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சொந்தமான 14 ஏக்கர் நிலப்பரப்பில் ஒருங்கிணைந்த பண்ணையம் அதாவது மீன் வளர்ப்பு, பட்டுப்புழு வளர்ப்பு, துல்லிய பண்ணைய முறையில் காய்கறி சாகுபடி, பாதுகாக்கப்பட்ட சூழலில் காய்கறி சாகுபடி, பரண்மேல் ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு மற்றும் மண்புழு உர உற்பத்தி போன்ற வேளாண் சார்ந்த தொழில்கள் அடங்கிய திட்டம் முனைவர் கை. குமணன் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகளால் தயாரிக்கப்பட்டது. இத்திட்டத்தின் முதல் நிகழ்ச்சியாக இத்திட்டத்தை பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டத்தின் முக்கியத்துவம், பயன்கள் போன்றவை பற்றி திருராமேஸ்வரம் கிராமத்தில் மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் முனைவர் தங்க. தாமோதரன், கு. சுதாகர் மற்றும் கை. குமணன் ஆகியோர்களால் 1.8.2012 அன்று பயிற்சி நடத்தப்பட்டது.

## நெற்பயிரில் சல்பைடு தாக்கம்

வாடாமங்கலம் கிராமத்தில் குறுவை பட்டத்தில் பயிரிடப்பட்டிருந்த நெற்பயிருக்கு தொடர்ந்து உப்புத்தன்மை கொண்ட நீரினை பாசனத்திற்கு பயன்படுத்தியதால் பாதிப்புக்குள்ளான பயிர்களை நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் தி.செங்குட்டுவன் மற்றும் விஞ்ஞானிகள் சுதாகர், ஆனந்த கிருஷ்ண வேணி, குமணன் ஆகியோர் பார்வையிட்டு பயிர் பாதுகாப்பு குறித்து பரிந்துரைத்தனர்.



## தென்னை கூண் வண்டு தாக்குதல்

திருவாரூர் வட்டாரம் மாங்குடி கிராமத்தில் தென்னையில் கூண் வண்டு தாக்குதல் அதிகளவில் காணப்பட்டது. நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் தி.செங்குட்டுவன் மற்றும் முனைவர் மெ. செந்தில் குமார் ஆகியோர் நேரில் கண்டறிந்து விவசாயிகளுக்கு தென்னை கூண் வண்டின் சேதத்தின் அறிகுறி மற்றும் கூண் வண்டினை கட்டுப்படுத்த மோனோ-குரோட்டோபாஸ் மருந்தினை வேர் மூலம் செலுத்தும் விதம் குறித்து விளக்கமளித்தனர்.



## துல்லிய பண்ணையத்தில் பாகல் சாகுபடி

நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலைய வழிகாட்டுதலின்படி திருவாரூர் மாவட்டம் வடுவூர் வடபாதி கிராமத்தில் துல்லிய பண்ணையம் அமைத்து பந்தல் காய்கறிப் பயிரான பாகல் பயிரிடப்பட்டுள்ளதை திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் தி.செங்குட்டுவன் அவர்கள் பார்வையிட்டு பாகல் செடியை பராமரிக்கும் தொழில்நுட்ப ஆலோசனைகளான பந்தல் அமைத்தல் கொடி உருவமைப்பை பராமரித்தல் மற்றும் நுண்ணூட்டச்சத்து மேலாண்மை குறித்து எடுத்துரைத்தார்.



## நெல் ஊட்டச்சத்து மேலாளர் திட்டம் - வயல்வெளி பார்வை

சர்வதேச பொட்டாஷ் நிறுவனத்தின் விஞ்ஞானி முனைவர். எல்டட் அவர்கள் நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூலம் செயல்படுத்தி வரும் நெல் ஊட்டச்சத்து மேலாளர் திட்டத்தின் வயல்வெளி திடலை 07.09.2012 அன்று பார்வையிட்டு விவசாயிகளுடன் கலந்துரையாடினார். நிகழ்ச்சியில் முனைவர் தி.செங்குட்டுவன், முனைவர் ச.ஆனந்த கிருஷ்ணவேணி, திரு. ப. சுரேஷ் மற்றும் சிக்கல் வேளாண்மை அறிவியல் நிலைய தலைவர் முனைவர் ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



## பிரபஞ்சத்தை இணைக்கும் எங்கள் இணையதளம்

பிரபஞ்சத்தை இணைக்கும் இணைப்புச் சங்கிலியாய், தகவல் வங்கியாய்
எந்நாட்டினரும் அறிந்து கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள எங்கள் இணையதளத்தை
**www.kvkthiruvarur.com**
கண்டு தங்கள் மேலான கருத்துக்களை தொலைபேசியில் தெரிவியுங்கள்.

## சம்பா சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டம் மற்றும் சமுதாய நாற்றங்கால்

மேட்டூர் அணையில் போதிய நீர் இருப்பு இல்லாத காரணத்தினால் இந்த ஆண்டு வழக்கம் போல் ஜுன் மாதத்தில் அணை திறக்க இயலவில்லை. ஆற்றுப் பாசனத்தையே நம்பியுள்ள விவசாயிகளில் குறுவை சாகுபடி செய்ய முடியாத சூழ்நிலை. மேலும் சம்பா பருவமும் தள்ளி போய் விட்டது. பின்சம்பா பருவத்திலாவது நெல் பயிரிட உதவிடும் வகைளில் தமிழக அரசு சமுதாய நாற்றங்கால் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. இதன் மூலம் நாற்று தயார் செய்யும் போது அதில் ஆற்றில் நீர் வந்தவுடன் நடவுப் பணியை மேற் கொள்ள முடியும். நிலைய விஞ்ஞானிகள் தேவையான தொழில்நுட்ப பரவலாக்கம் செய்து வருகிறார்கள்.

## பொதிகை தொலைக்காட்சி

இந்நிலையத்தின் மூலம் செயல்படுத்தி வரும் கள ஆய்வு திடல்கள், முதல்நிலை செயல் விளக்கத் திடல்கள், நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப மாதிரித் திடல்கள் மற்றும் நிலையத்தின் தொழில்நுட்ப வழிகாட்டுதலின்படி முன்னேறிய விவசாயிகள் பற்றி பொதிகை தொலைக்காட்சி நிலையத்தினரால் 08.08.2012 முதல் 10.08.2012 வரை நிகழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மொத்தம் 42 நிகழ்ச்சிகள் பதிவு செய்யப் பட்டன. இவையாவும் 04.09.2012 முதல் 13.12.2012 வரை தொடர்ந்து ஒளிப்பரப்பாகவுள்ளது. மாலை 6.00 மணி முதல் 6.30 மணி வரை ஒளிப்பரப்பாகும் நிகழ்ச்சி மறுநாள் காலை 6.00 மணி முதல் 6.30 மணி வரை மறு ஒளிப்பரப்பும் செய்யப்படுகிறது.

## கருவி மூலம் புல் வெட்டுதல்

தீவனப் பயிர்களின் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து நடைபெற்ற பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு கருவி மூலம் புல்வெட்டுதல் குறித்து செயல் விளக்கம் செய்து காண்பிக்கப் பட்டது. புல்வெட்டும் கருவியின் பயன்பாடு, செயல் பாட்டுத் திறன் மற்றும் பராமரிப்பு முறைகள் குறித்து முனைவர் அ.காமராஜ் தொழில் நுட்ப விளக்கமளித்தார். பயிற்சியில் 35 பயனாளிகள் கலந்து கொண்டனர்.



## பொங்கல் கரும்பில் பருக்கரணை மூலம் நாற்றங்கால் உற்பத்தி

பொங்கல் கரும்பில் விதைக் கரும்பு பற்றாக்குறை காணப்படுவதால் பருக்கரணைகள் மூலம் நாற்றுக்கள் உற்பத்தி செய்து நடவுக்கு பயன்படுத்துவது பற்றிய செயல் விளக்கம் கொத்தங்குடி கிராமத்தில் விஞ்ஞானிகள் முனைவர் கு. சுதாகர், முனைவர் ச. ஆனந்த கிருஷ்ணவேணி மற்றும் முனைவர் கை. குமணன் ஆகியோரால் செய்து காண்பிக்கப்பட்டது.



## ஒட்டுண்ணி வெளியிடுதல்

புள்ளவராயன்குடிகாடு கிராமத்தில் பூவண்ணன் என்பவரது தோட்டத்தில் திருவாரூர் மாவட்ட ஆட்சியர் திரு. சி.நடராசன் தலைமையில் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் தி. செங்குட்டுவன் பப்பாளி மாவுப் பூச்சியைக் கட்டுப்படுத்த மல்பெரி செடியில் அசிரோபேகஸ் பப்பாயே ஒட்டுண்ணியை வெளியிட்டார்.



## நிலம் சமன்படுத்துதல்

நிலம் சமன்படுத்துதலின் முக்கியத்துவம் குறித்து திருவாரூர் மாவட்ட விவசாயிகள் நேரடியாக பார்த்து பயன்பெறும் வகையில் இந்நிலையத்தில் லேசர் கருவி உதவியுடன் டிராக்டர் கொண்டு நடவு வயலை சமன்படுத்துதல் குறித்து நேரடி செயல் விளக்கம் நடைப்பெற்றது. இந்நிகழ்ச்சியில் 30 க்கும் மேற்பட்ட முன்னோடி விவசாயிகள் கலந்து கொணடு பயன் பெற்றனர்.



## இயந்திரம் மூலம் நெல் நடவு

நெல் சாகுபடி பணிகளுக்கு கூலி ஆட்கள் பற்றாக்குறை காரணமாக பருவத்தே பயிர் செய்ய இயலவில்லை. இதனைக் கருத்தில் கொண்டு அறிவியல் நிலையத்தில் இயந்திரம் மூலம் நெல் நடவு செய்வது பற்றிய செயல் விளக்கம் நடைப்பெற்றது.



## கருவி மூலம் பஞ்சு எடுத்தல்

திருவாரூர் மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் வலங்கைமான் வட்டாரம் பூந்தோட்டம் கிராமத்தில் பருத்தி பஞ்சு எடுக்கும் கருவி குறித்த செயல் விளக்கம் முனைவர் அ. காமராஜ் செய்து காட்டினார். முனைவர் மெ. செந்தில்குமார், வலங்கைமான் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் இளஞ்செழியன் மற்றும் 50 க்கும் மேற்பட்ட முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர்.



## ஸ்பைரூலினா

ஸ்பைரூலினா என்ற சுருள்பாசி உலகத்திலேயே மிகவும் பழமையான உயிரினமான சயனோபாக்டீரியா குடும்பத்தை சேர்ந்தது. இது நன்னீரில் வளரும் உணவுப் பாசியாகும். இப்பாசியில் 60 முதல் 65 சதவிகிதம் புரதச்சத்து உள்ளதால் மனிதர்கள்



மட்டுமல்லாது கால்நடைகள், கோழியினங்கள், வளர்ப்பு மற்றும் அலங்கார மீன்களுக்கு சிறந்த உப உணவாகும். இப்பாசி புற்றுநோய் மற்றும் எய்ட்ஸ் போன்ற உயிர்கொல்லி வியாதிகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தியாக விளங்குகிறது. ஆயிரம் கிலோ காய்கறி மற்றும் பழங்களில் உள்ள சத்துக்கள் ஒரு கிலோ ஸ்பைரூலினாவில் உள்ளது. விண்வெளி ஆராய்ச்சி பயணம் மேற்கொள்பவர்கள் கேப்சூல் உணவாக ஸ்பைரூலினாவை எடுத்துக் கொள்கிறார்கள். மருத்துவ குணங்கள் நிறைந்த ஸ்பைரூலினா மக்களிடையே



பிரபலமடைந்து வருவதால் வணிகரீதியில் உற்பத்தி செய்து விற்பனை செய்வதின் மூலம் வருமானத்தை பெருக்கலாம்.

- தங்க. தாமோதரன், தி. செங்குட்டுவன்.

## அசோலா

அசோலா பெரணி வகையைச் சார்ந்த நீரில் மிதந்து வளரும் தாவரமாகும். இத்தாவரம் மிகச்சிறிய இலைகளையும் நுண்ணிய வேர்களையும் கொண்டது. அசோலாவில் அசோலா பின்னோட்டா, அசோலா மெக்சிகானா, அசோலா பிலிக்குலாய்டஸ், அசோலா கரோலியானா, அசோலா மைக்ரோபில்லா, அசோலா நைலோட்டிகா என பல வகைகள் உள்ளன. நம் நாட்டில் அசோலா பின்னோட்டா என்ற வகையே அதிகம் காணப்படினும் அமெரிக்காவிலிருந்து கொண்டு வரப்பட்ட அசோலா மைக்ரோபில்லா என்ற இரகம் அதிக வெப்ப நிலையைத் தாங்கி நன்கு வளரும். அசோலாவில் 25-35 சதவிகிதம் வரை புரதச்சத்து உள்ளது. மேலும் கால்நடைகளுக்கு தேவையான அமினோ அமிலங்கள், தாது உப்புக்கள், வைட்டமின்கள், பீட்டாகரோட்டின் ஆகிய சத்துக்கள் உள்ளன. இத்தகைய சத்துக்கள் நிறைந்த அலோசாவை கால்நடைகள், கோழிகள், ஆடுகள் மற்றும் மீன்களுக்கு உணவாக அளிப்பதின் மூலம் உற்பத்தி செலவை குறைப்பதுடன், உற்பத்தி செய்யப்படும் முட்டை, பால், இறைச்சி, மீன் ஆகியவைகளின் தரம் மற்றும் மதிப்பு கூடும். அசோலாவை உணவாக கொடுக்கும் போது நாளொன்றுக்கு கறவை மாடு மற்றும் வெண்பன்றிக்கு 1.5-2 கிலோ வரையிலும், ஆடுகளுக்கு 300-500 கிராம் வரையிலும், முயலுக்கு 100 கிராம் வரையிலும், முட்டை மற்றும் இறைச்சி கோழிகளுக்கு 20-30 கிராம் வரையிலும், வான்கோழிகளுக்கு 50-100 கிராம் வரையிலும் உணவாக கொடுக்கலாம்.



- தங்க. தாமோதரன், தி. செங்குட்டுவன்.

## உணவுக் காளான்



காளான் ஒரு சிறந்த சுவைமிகு இயற்கை சைவ உணவாகும். இது சைவம் மற்றும் அசைவம் சாப்பிடுபவர்களுக்கு மிகவும் ஏற்றதாகும். காளான் அசைவ உணவின் பண்புகளை பெற்றது. காளானில் 80-89 சதவிகிதம் ஈரப்பதம், 5.9-6.2 சதவிகிதம் மாவு சத்து, 2.8-8.7 சத விகிதம் புரதம், 0.50-0.60 ச த வி கி த ம் கொழுப்பு, 0.60-0.65 சதவிகிதம் தாது உப்புகள், 0.02-0.03 சதவிகிதம் ஊட்டச்சத்துக்கள் மற்றும் 0.8-1.0 சதவிகிதம் நார்ச்சத்து நிறைந்துள்ளதால் சர்க்கரை வியாதி, இரத்த அழுத்தம், மாரடைப்பு, சிறுநீரக கோளாறு மற்றும் புற்றுநோய்க்கு சிறந்த மருந்தாகும்.

- தங்க. தாமோதரன், தி. செங்குட்டுவன்.

## கோகோ

தியோபிரம்மா கோகோ என்கிற தாவரவியல் பெயர் கொண்ட கோகோவில் க்ரையல்லோ மற்றும் ஃபாரஸ்டிரோ ஆகிய இரண்டு வகைகள் உள்ளது. இவற்றில் க்ரையல்லோ சிவப்பு நிற காய்களையும், ஃபாரஸ்டிரோ பச்சை மற்றும் மஞ்சள் நிற காய்களையும் கொண்டது. இதில் ஃபாரஸ்டிரோ வகைத் தேர்வுகள் தான் இந்தியாவில் பெருமளவு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தென்னை மற்றும் பாக்கு தோப்புகளில் கோகோ ஊடுபயிராக சாகுபடி செய்வதற்கு ஏற்றது. சீரான நிழல் (50-60 சதம்), அதிகளவு காற்று ஈரப்பதம், மழையளவு மற்றும் பாசன வசதியுடைய பகுதிகளில் சாகுபடி செய்வதற்கு ஏற்றது. இருபது வருடத்திற்கு மேற்பட்ட 25 அடி மற்றும் அதற்கும் அதிகமான இடைவெளியில் வளர்க்கப்படும் தென்னையில் இரண்டு தென்னை வரிசைக்கு இடைவெளியில் 10 அடி இடைவெளியிலும், இரண்டு தென்னை மரங்களுக்கு நடுவில் ஒரு கோகோ செடியையும் நடவு செய்யும் போது ஏக்கருக்கு அதிகபட்சமாக 200 கோகோ செடிகளை சாகுபடி செய்யலாம். செடிகளை நட்ட இரண்டாவது அல்லது மூன்றாவது வருடம் முதல் காய்கள் காய்க்கத் துவங்கும். பூக்கள் பூத்து 120-150 நாட்களில் காய்கள் அறுவடைக்கு தயாராகின்றன. முதிர்ச்சி அடைந்த காய்கள் பச்சை



நிறத்திலிருந்து இளம் மஞ்சள் நிறமாக மாறும் நிலையில் அறுவடை செய்ய வேண்டும். ஐந்து வருடத்திற்கு பிறகு பொருளாதார மகசூலாக ஒவ்வொரு மரத்திலிருந்தும் ஒன்று முதல் இரண்டு கிலோ உலர் விதைகள் கிடைக்கும். ஒரு ஏக்கரிலிருந்து சராசரியாக 400 கிலோ உலர் விதைகள் மகசூலாக கிடைக்கும் போது மொத்த வருமானமாக ரூ.52,000/- (ரூ.130/கிலோ) கிடைக்கும்.

- கை. குமணன், தி. செங்குட்டுவன்.

## விருந்தினர்கள் வருகை



பிலிப்பைன்சில் உள்ள பன்னாட்டு நெல் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி முனைவர் புரேஷ் மற்றும் குழுவினர் இந்நிலையத்திற்கு 25-4-2012 அன்று வருகை புரிந்து விஞ்ஞானிகளுடன் கலந்துரையாடினார்கள்.

பன்னாட்டு பொட்டாஷ் நிறுவன விஞ்ஞானி முனைவர் எல்டட் அவர்கள் 7-9-2012 அன்று இந்நிலையத்திற்கு வருகை புரிந்தார்கள்.



## மாதாந்திர கருத்துக் கூட்டம்

நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் திருவாரூர் மாவட்ட வேளாண்மைத் துறையினருக்கு ஒவ்வொரு மாதமும் முதல் செவ்வாய்க்கிழமையன்று மாதாந்திர கருத்துக் கூட்டம் நடைபெற்று வருகிறது. கூட்டத்தில் கலந்து கொள்ளும் அலுவலர்களின் சந்தேகங்களுக்கு விஞ்ஞானிகள் தொழில்நுட்ப விளக்கமளித்து வருகிறார்கள்.



## வேளாண்மைத்துறை செயலர் வருகை

தமிழக அரசின் சம்பா சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டம் மற்றும் சமுதாய நாற்றங்கால் அமைப்பது குறித்து திருவாரூர் மாவட்ட வேளாண்மைத் துறை அலுவலர்களுக்கு எடுத்துரைப்பதற்காக 28.08.2012 தமிழக வேளாண்மைத்துறை செயலர் அவர்கள் இந்நிலையத்திற்கு வருகை புரிந்தார்கள். பின்னர் நடைபெற்ற கூட்டத்தில் நிலைய விஞ்ஞானிகள் கலந்து கொண்டனர்.



## சிறந்த விவசாயிக்கு விருது

நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலைய தொழில்நுட்ப வழிகாட்டுதலின் மூலம் ஒருங்கிணைந்த பண்ணையம் அமைத்து அதில் கறவை மாடு, வெள்ளாடு, நாட்டுக்கோழி, காய்கறிகள், தீவனப் பயிர்கள், உள்நாட்டு மீன், துல்லிய பண்ணையம் என வெற்றிகரமாக வேளாண்மையில் சாதித்துவரும் கொத்தங்குடி திரு. கணேஷ் கமலக்கண்ணனை நமது திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் தி. செங்குட்டுவன் அவர்களின் பரிந்துரைத்தலின்படி தினமலர் நாளிதழ் திருச்சியில் நடத்திய விவசாயக் கண்காட்சியில் சாதனை விவசாயி என்ற விருது வழங்கி பாராட்டியது. அந்த மகிழ்ச்சியை திரு.கமலக்கண்ணன் நமது நிலைய விஞ்ஞானிகளுடன் பகிர்ந்து கொண்டார்.




சிறப்பு ஆசிரியர்
முனைவர் **பா. கலைச்செல்வன்**
விரிவாக்கக் கல்வி இயக்குநர்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்

ஆசிரியர்
முனைவர் **தி. செங்குட்டுவன்**
திட்ட ஒருங்கிணைப்பாளர்

இணை ஆசிரியர்
முனைவர் **தங்க. தாமோதரன்**
தொழில் நுட்ப வல்லுநர் (வேளாண் விரிவாக்கம்)

ஆசிரியர் குழு
முனைவர் **கு.சுதாகர்** தொழில் நுட்ப வல்லுநர் (உழவியல்)
முனைவர் **அ.காமராஜ்** தொழில் நுட்ப வல்லுநர் (வேளாண் பொறியியல்)
முனைவர் **கை.குமணன்** தொழில் நுட்ப வல்லுநர் ( தோட்டக்கலை )
முனைவர் **ச.ஆனந்த கிருஷ்ணவேணி** தொழில் நுட்ப வல்லுநர் (உழவியல்)
முனைவர் **மெ.செந்தில்குமார்** தொழில் நுட்ப வல்லுநர் (பூச்சியியல்)
திருமதி. **தெ.ரேகா** திட்ட உதவியாளர் (தொழில் நுட்பம்)
திருமதி. **இரா.சகுந்தலா** திட்ட உதவியாளர் (கணினி)
திரு. **ச.பாக்கியநாதன்** பண்ணை மேலாளர்


நூல்-அஞ்சல்

பெறுநர்

திரு. / திருமதி. ........................................................
அவர்கள்
..........................................................................
..........................................................................


அனுப்புநர்
**திட்ட ஒருங்கிணைப்பாளர்**
வேளாண்மை அறிவியல் நிலையம்
நீடாமங்கலம், திருவாரூர் மாவட்டம்
தொலைபேசி எண்கள் : 04367-260666 / 261444
மின் அஞ்சல் : kvkndm@tnau.ac.in
வலைதளம் : www.kvkthiruvarur.com


அச்சிட்டோர் : **மை கிராபிக்ஸ்**, திருவாரூர். பேசி : 224931